உ

கடவுள்துணை.

# மனோரஞ்சித அலங்காரம்.

## இரண்டாம்பாகம்.

---

இஃது.

பெரியகுளந்தாலூகா
கம்பம் - உத்தமபுரத்திலிருக்கும்
கா. நயினாருவுத்தரொன்று பேர்விளங்கிய
வணாயத்தாருவுத்தரவர்களால்,
பாடியதை

---

சிதம்பரத்தைச்சார்ந்த
தில்லைவிடங்கனி லிருக்கும்
சேதி-இராமபிள்ளை குமாரர்
துரைசாமிபிள்ளை யவர்களால்,
சென்னை
ஸ்ரீமட்டுவார்குழலம்பாள் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
1889.



உ

கடவுள்துணை.

# மனோரஞ்சித அலங்காரம்.

1160

மதுரையிலிருக்கும்.

வெள்ளைச்சாமிபிள்ளை அவர்களாலியற்றிய,

சாத்துக்கவி

வெண்பா.

கப்பநகர்வாளுங் காளைநயினாருரைத்த
இன்பமனோரஞ்சிதத்தை இவ்வுலகில்—சம்பரமதாய்
பாடிடவேயிரண்டாம் பாகமதாய் அச்சிலிட
நாடிமுயற்சிசெய்தோம் நாம்.

கதையின் தொயர்ச்சி.

பொது - விருத்தம்,

தேரியேமன்னங்கள்பூரித் திருவருமிருக்கும்போது
சூரியனுதையமானான் துரந்தனர்கதவைமெள்ள
நாரியின்விடைமேல்வைகை நதிக்கரைமுழுகிப்பாலன்
பாரியாளிடத்தில்வந்து பசிக்குதென்றுரைத்திட்டானே

இதுவுமது.

பசிக்குதென்றுரைத்தபோது பாங்கியைக்கூவிமாது
ருசிக்கவேகரிகாயன்னம் நொடியினில்சமைத்திவர்க்கு
பொசித்திடபோடுமென்று புருடனையனுப்பிவைத்தாள்
விசித்திரமுடன்சமைத்து வேந்தனுக்கீய்ந்திட்டாளே.

{பாங்கி மரகதம்பிள்ளைக்கு அன்னமிட்டது தெம்மாங்கு.}

வேளைபசிதீருமென்று
வில்லாபுரம்பிள்ளையற்கு
வாளிலையிலன்னங்கொட்டி
வகைவகையாய்க்காய்படைத்தாள். (நன்று)

அலங்காரம்,

அட்டா

வாளக்காய்கள் வளுதலங்காய்
பூசினிக்காய் பொரித்தமாங்காய்
கத்திரிக்காய் கரணைக்கிளங்கு
கடலைசேர்ந்த புடலங்காயும்

அட்டா

வரிவெண்டிக்காய் சிறுசுண்டைக்காய்
வாகாய்சமைத்தி பாகப்பச்சடி

அவரைக்காயுடன் துவரைப்பருப்பும்
அக்காகொடுத்த சொக்காக்கீரையும்

அடடா

அளகாய் சமைத்தாள்
அடுக்காய் படைத்தாள்
பளகத் தொடுத்தாள்
பசியைத் தீர்த்தாள். (நன்று)

(செம்மாங்கு.)

சாப்பிட்டுக்கைபலம்பி
தையலிடம்போகவென்று
கூப்பிட்டெடந்துவந்து
கோதையைத்தழுவினனே (நன்று)

அலங்காரம்.

அடியே

ண்பகப்பூவே சிவந்தமேனியே (நன்று)

(மனோரஞ்சிதஞ்சொல்லுதல்.)

கார்த்திகையில்கண்டெடுத்த
கனகமணிரத்தினமே—நான்
மாத்திகளையுதர்க்கு
யேத்தசேலைவாங்கிவாரும், (நன்று)

அலங்காரம்,

அடடா

அரளிப்பூவே ஆலம்பளமே; (நன்று)

மரகதம்பிள்ளை மனோரஞ்சிதத்திற்கு
சேலைவாங்கிவந்து கொடுத்தது
தெம்மாங்கு,

சேலையென்றுதான்கேள்க
சிந்தைமகிழ்ந்தோடிவந்து
வேலப்பஞ்செட்டியிடம்
கோலவர்ணமாயெடுத்தான். (நன்னு)

அலங்காரம்,

அடடா

முத்துவர்ண முருச்சுக்குத்தி
மோகனாங்கி முகமினுக்கி
சுத்துக்கபியுஞ் சூரியகாந்தி
சொருகியுடுத்த அருகுமணியன்

அடடா

தாள்சப்பத்திரி சந்திரகாந்தி
சரிகைபோட்ட சல்லாசேலை
ரூசவர்ணமு ரோசாப்பூவும்
நடையலங்காரங் குடைமுருச்சான்

வகைக்கி

நாலுஞ் செடுத்தான்
நாணயக் கொடுத்தான்
கோலஞ்சி யடுத்தான்
ந்துகுணர் கொடுத்தான் (நன்னு)

பொது - விருத்தம்.

சேலைபைவாங்கிமாது சிலதுநாள்களித்தபின்னல்
சாலமாய்பொருள்பறிக்க தாய்மகளிடத்தில்சொன்னல்
வேலையாள்வீட்டினுள்ள வெங்கலபாத்திரமெல்லாம்
காலைமுன்னெளித்துவைத்துக் கதரியேபுலம்புவாளே.

வசனம்,

அகோ கேளுங்கள் புண்ணியவான்களே இந்தப்பிரகாரமாக மரகதம்பிள்ளையானவர்வாங்கிவந்துகொடுத்த அனேகவிதமானசேலைவர்க்கங்களையெல்லாம்மனோரஞ்சிதமென்ற தாசியானவள் வாங்கிவைத்துசிலசேலைகளைக்கட்டி நித்தியம் புதுமணவனாப்பெண்போலே பனிக்கிக்குலுக்கிபகட்டிச்சிமிட்டி வீணைவாத்தியங்களைமீட்டி விநோதநாடகங்களைக்காட்டி சங்கீர்த்தனங்களைப்பாடிசதிர்முதலியவினோதத்தைஎன்னேரமுங்கொண்டாடிக்கொண்டு சிலநாள்களைகளித்திருக்கும்போது ஒருநாள் கிழத்தாய்க்கிழவியானவள் மகளைரகசியமாகக்கூப்பிட்டு என்னடிபெண்ணே வெள்ளாம்பயலுடையதலையைக்கட்டவி முலையை யுரிந்தாமல்என்னேரமும் அவனுடனேவிளையாடிக்கொண் டிருக்கிறாய்யென்றுகேள்க மனோரஞ்சிதமானவள் அம்மாள்நீயென்பேரில்கோபப்

டவேண்டாம் யின்றயத்தினா ராத்திரியில் நம்மளுடைய வீட்டிலிருக்கிற வெங்கலபாத்திரங்களெல்லாம் யாருக் குங்காணாமல் பணாத்துவைத்துவிட்டு கள்ளன்வந்து திருடிக்கொண்டு போய்விட்டானேயென்றுகாலமேகதறி யளுதுகொண்டுவாநம்மளிடத்தில்வந்திருக்கிறமரகதம்பி ள்ளையிடத்தில்நான்ஒண்ணுக்குநாலாகவாங்குகிறேனெ ன்றுசொல்ல தாய்கிளவியானவள் மகள்சொன்னவித மாகவே அன்றையராத்திரியில்வீட்டிலிருந்தவெங்கலபா த்திரங்களையெல்லாம் யாருக்குங்காணாமல்மளாத்துவை த்துவிட்டு காலமேயெளுந்துபார்த்துக்கள்ளன் திருடிக் கொண்டுபோய்விட்டானென்றுபுலம்புகிரவிதங்காண்க

தாய்கிளவி வெங்கலபாத்திரங் களவு
போய்விட்டதென்று புலம்புதல்,
காதல்போல் சொல்லல்.
கண்ணிகள்.

ஐயோதிருவுளமே அளகுமலைக்காயாப்பு
வையகத்திலென்னுடைய வயறெரியவிட்டீரே
தென்மதுராசொக்கேசா தேவியரேமீனாட்சி
யென்மனதுநோக யிடர்பார்த்திருந்தீரே
வள்ளிமணாளா வடிவேல்முருகேசா
கள்ளியைப்போல்நின்று கதரவோபார்த்திருந்தீர்

மொட்டைமுனி அய்யா முறுமதுரைவீரியனே [ந்தீர்
யெந்த-பொட்டிமகனென்வீட்டில் புகுதவோபார்த்திரு
நான்-அங்கங்கொடுத்து அடுக்கடுக்காய்வாங்கிவைத்த
வெங்கலத்தின்பாத்திரங்கை விட்டேன்ஜிகநாதா
சுத்திசுவரிருக்க சுவரில்சீசாவிருக்க
யெத்தினைதான் தந்திரத்தில் யிங்கேவந்துபூந்தானே
கள்ளநரியானேயென் கனகமணிமாளிகையை
யெந்த-உள்ளரிந்தகள்ளன் உபதேசஞ்சொன்னானே
மாப்பிளையும்பெண்ணு மனையில்படுத்திருக்க
கூப்பிடாமல்நித்திரைகள் கொள்ளும்பொடிபோட்டா
பூட்டைத்திறந்துபுலிபோலேஉள் நுழைந்து [னே
வீட்டிலடக்கிவைத்த வெங்கலங்கைக்கொண்டானே
வெங்கலமெல்லாந்திருடி வெளியேரிப்போகுகையில்
யெங்கள்குலதெய்வம்வந் தெதிர்த்துமரிக்கலியோ
தண்டலையொன்பேலே சந்தோஷமாய்கொடுத்த
அண்டாவையெங்கே அடவுவைத்துப்போட்டானே
கும்பையங்கார்வாங்கிக்கொடுத்துயெனைச்சேர்ந்த
செப்புக்குடத்தையெந்தச் செட்டியிடவித்தானே
வடக்குத்தெருவினில்வாள்மாணிக்கம்பிள்ளைதந்த
அடுக்குபாத்திரம்முழுது ஆர்க்குக்கொடுத்தானே
நத்தத்துராமலிங்கர் நாடிவாங்கிக்கொடுத்த

குத்துவிளக்கையெந்தகோமுட்டிகட்கியேந்தானே
பெரியதவலைகளும் பிடிசெம்புவட்டியுடன்
அரிதிக்கிறையமதாயார்க்குக்கொடுத்தானே [போய்
மற்றிருந்தசொத்தையெல்லாமண்ணுவான்கொண்டு
சுத்தகிரையஞ்செய்து சூதாடிப்போட்டானே
என்னென்னசெய்தானே எவனென்றுநான்காண்பேன்
பொன்னனையென்னுயிருபுவியிருப்பதில்லையென்று
குத்தினாள்யீரக்குலையைப்பிசைந்திழுத்து
கத்தினாள்சத்தமதைக் கண்டாள்மரகதந்தான்
கண்டவுடன்பெண்டீனாக் கண்மூளிக்கத்தட்டிவிட்டு
சென்றகதவையிருவர் திறந்துவந்துபார்க்கயிலே
முட்டினாள்மாமிமுகத்திலறைந்துமகளைத்
திட்டினாள்வீழ்ந்து தியங்கினாளப்பொழுது
யெத்தினைதான்னோமடி யிருமுளுதுஉங்களுக்கு
நித்திரையோசற்றேநினைவுதெரியலியோ
தூங்கினோம்மெல்லோருஞ் சோரன்னம்வாய்களிலே
சாங்கமாய்மண்ணடித்து தனந்திருடிப்போனானே [ம்
நான்-வாலிபத்திலேதேடிவைத்திருந்தசொத்தைஎல்லா
காவிமகள்நீபிறக்கக்கள்ளன்கையிலொப்படைத்தேன்
இளவியிவைசொல்லியழுக்கிள்ளை மனோரஞ்சிதையாள்
மளமளென்றுகண்ணீரா மார்பெல்லாஞ்சோரவிட்டாள்

மார்நிறைந்ததண்ணீரை மாகதம்பிள்ளைகண்டு
பேருவையினால்துடைத்துபுத்திமதிசொல்லலுற்றான்

மாகதம்பிள்ளை மனோரஞ்சிதத்திற்கும்
தாய்க்கிளவிக்கும்மனதைத்தேற்றியது
விருத்தம்

அத்தையேபொருள்போச்சென்று அஞ்சிநீமயங்கவே
ண்டாம்,எத்தனைபோனாலென்ன எளியனானிருக்குமட்டு
ம்,பத்து நூறாகினாலும் பாத்திரமெல்லாமிப்போ
சுத்தநல்புதியதாகத் துருசினில்வாங்கிவாறேன்,

மாகதம்பிள்ளைவெங்கலபாத்திரம்
வாங்கிவந்துகொடுத்தது.
தெம்மாங்கு,

வாங்கிவாறேனென்றுசொல்லி
மாமிமெய்க்கவேநடந்து
வெங்கலபாத்திரக்கடைபோய்
தங்கியென்னாவகையெடுத்தான். (நன்று)

அலங்காரம்.

அடடா

அண்டாப்பானை குண்டாச்சட்டி
அகப்பையுடனே அடுக்குபாத்திரம்

தவிலைப்பாத்திரம் சருவச்சட்டியும்
தங்கம்போல்மின்னும் வெங்கலவட்டியும்

அடடா

குத்துவிளக்கு குடைவிளக்கு
கொட்டகைக்கேத்த சாவிளக்கு
செப்புக்குடமுஞ் சிப்பிலித்தட்டும்
தீர்த்தம்வைக்குதற் கேத்ததமுளர்

வகைக்கி

சேர்தனுஞ் செடுத்தான்
செம்பொன்னைக் கொடுத்தான்
பாத்திர மெடுத்தான்
பாவைகைக் கொடுத்தான் (நன்னு)

(பொது-விருத்தம்.)

பாத்திரமெல்லாம்வாங்கிபாத்தையாள்மனையுள் வைத்து
தோத்திரஞ்செய்தாளெந்தன் துரையோனும்மைப்
பார்த்ததேயில்லையென்று பசப்பினாள்பாலகன்தன் [வே
னாஸ்திகளெல்லாம்வேசைகளித்திடமனம் வைத்தானே

(தெம்மாங்கு.)

வேசைமனோஞ்சிதத்தை
விரும்பிவிரும்பிநிதம்

ஆசைவைத்துசேர்ந்ததினால்
ஆஸ்தியெல்லாந்தோத்திட்டானே (நன்னு)

அலங்காரம்,

அடியே

ஆடுகொடுத்தான் மாடுகொடுத்தான்
அடுக்குமெத்தையின் வீடுகொடுத்தான்
சேர்ந்துபடுக்கக் கட்டிலுங்கொடுத்தான்
தினத்துக்கம்பது பணமுங்கொடுத்தான்

அடடா

பட்டுகொடுத்தான் பணிதிக்கொடுத்தான்
பகளக்கொத்துகள் நகையுங்கொடுத்தான்
பசித்திருக்காமல் பொசித்திருக்கவே
பணியநஞ்சையை வெளிதிக்கொடுத்தான்

அடடா

உள்ளதைக் கொடுத்தான்
ஓட்டோடுந் தோத்தான்
வெள்ளையை வடித்தான்
மெலியத் தொடுத்ததான் (நன்னு)

{மாகதம்பிள்ளை நகைமுதலிய உடைமானத்தை விற்றுக்கொடுத்தது}

இன்னஞ்செலவுகளுக்
கில்லையென்றுகேட்கயிலே

உன்னிடந்தன்னோ
டேரில்வந்துயென்றுசெய்தான்

அலங்காரம்

அடடா

கல்லுபதித்த கடுக்கன்வித்தான்
கையிலேமோதிரங் களட்டிவித்தான்
மிஞ்சியாறு யெடுத்துவித்தான்
வெளுத்தவேஷ்டியைவிலைக்கிக்கொடுத்தான்

அடடா

பொட்டியைவித்தான் பொளையைவித்தான்
பொங்கிசாப்பிடுஞ் சருவவித்தான்
பெண்டாட்டிகளுத்தி விருந்ததாலியை
பிடிங்கிக்கொண்டுபோய் கடையில்வித்தான்

அடடா

பொன்னுநா ரெடுத்தான்
பொகவித் தொடுத்தான்
அன்னமென் றெடுத்தான்
அவள்கைக் கொடுத்தான் (நன்று)

மாகதம்பிள்ளைக்கிஒட்டுநோவு பிடித்தது
நித்தம்பணங்கொடுத்து
நேரிளையைச்சேர்ந்ததற்கு

ரெத்தப்பிரமேகவெள்ளை
பத்திபிடித்துதையா (நன்ன)

அலங்காரம்

அடடா

மேளிவு ரெத்தக்கடுப்பு
கித்தவாந்தி சூத்திபிருமல்
வாதக்கடுப்பு வயத்திலெரிவு
மாருவெள்ளையுந் நீருக்கடுப்பும்

அடடா

வசட்டுதுடலை பிரங்குடலை
மருந்தைக்குடிப்பான் வாயாலெடுப்பான்
வந்துதொளுவான் மயங்கிவிளுவான்
மனோரஞ்சிதமென் றலரியளுவான்

யிதுநால்

வாசமும் போச்சே
வள்ளுப்போ லாச்சே
நேசமும் போச்சே
கிலேகே டாச்சே (நன்ன)

{ தாய்கிளவி மாரகதம் பிள்ளையைதுரத்த
வளிதேடும்டடிமகளிடத்தில்சொன்னது }

விருத்தம்

கையிலேபணமில்லாமல்கலங்கியேயிருப்பதல்லால்
மெய்யிலேரோகங்கொண்டுமெலிந்துடல்வாடும்போது

தையலாள்மகளைக்கூவிதந்திரமாகவெள்ளாம்
பையலைதூரத்துதற்குபாதையைத்தேடென்றாளே

வசனம்

அகோகேளுங்கள் புண்ணியவான்களேயிந்தப்பிரகாரமாய்மாகதம் பிள்ளையானவர்தன்னுடைய ஆஸ்திமுழுவது மனோஞ்சிதமென்கிற தாசிக்கு ஒப்படைத்துவிட்டுயினிமேல்கேட்டால் கொடுக்குறதற்குயாதொருவகையுங்காணேமென்றுமனதில் கிலேசமுற்றிருக்கும்போதுசம்போகத்தினால் உடம்பில் அக்கினியானதுமீறிப்பத்திப்பிடித்துஅநேகவிதமானநோவுகள்கொண்டு அவஸ்தைப்படுவதை தாய்க்கிளவியானவள் பார்த்துமகளைரகசியமாகக்கூப்பிட்டுஎன்னடிமகளேகொடுக்கமட்டும்வாங்கிக்கொடாதிருந்தால்விட்டுமுடுக்கவல்லோவேசிமுறைமையென்றுநம்மள்ஜாதியார்கள்சொல்கிறபள்மொழியையும்இன்னும்கற்றுக்கொள்ளவில்லையா இனிமேலாவது கற்றுக்கொண்டுநாளைமுதல்வெள்ளாம்பயலைதூரத்துவதற்குவழிதேடும் பெண்ணே யென்று சொல்லிப்போனாளையா,

தெம்மாங்கு

மாகதம்பிள்ளையிடம்
வகைகளொன்றுமில்லாமையால்

நோவிலனுந் துவதை
  பாவியறிந்தென்னசெய்தாள், (நன்று)

அலங்காரம்.

அடியே

பணமென்றுதினமுங் கேள்ப்பாள்
படுக்கையில்முளங்கையா லிடிப்பாள்
திரும்பிப்படுத்துச் செல்லிலடிப்பாள்
திரட்டிமெத்தைமே லுரிட்டிஉதைப்பாள்

அடடா

வேளைபார்த்து வெளியிலேவருவாள்
விடிந்தபின்னாலே வீட்டில்வருவாள்
வம்புதும்புகள் வாயிலெடுப்பாள்
மருந்துப்பேசினால் தூரத்தியடிப்பாள்

அடடா

வாடா யென்டாள்
வதங்க லென்பாள்
போடா யென்பாள்
பொசுங்க லென்பாள் (நன்று)

{ தாய்க்கிளவி மாகதம்பிள்ளையை
  தூரத்தும்படி ரூபில்சொன்னது. }

வள்ளைக்கொடியே-யெந்தன்
  மகளேமனோரஞ்சிதமே

வெள்ளாம்பயலையின்னம்
வீட்டைவிட்டு ஒட்டலியேர் (நன்று)

அலங்காரம்.

அடியினி

| | |
|---|---|
| யென்னுதருவான் | யேதுதருவான் |
| யேளைக்குடிபோ | லாக்கிப்போடுவான் |
| யிருக்கும்பொருளை | பரித்தபிறகு |
| யின்னமவனிங் | கேண்டிவருவான் |

அடியே

| | |
|---|---|
| பளையமாப்பிளை | பணங்கொண்டாறா |
| பயலைக்கண்டுவிட் | டோடிப்போறார் |
| வெங்கம்பயலுக் | கிங்கேயென்னடி |
| வியாதிமுத்தியே | சாகப்போறாண்டி |

அடியே

| | |
|---|---|
| விரட்டி | விடடி |
| வேறே | பாரடி |
| துரத்தி | விடடி |
| துடைப்பா | லடிடி (நன்று) |

(மாகதம்பிள்ளை கேட்டிருந்து சொல்லுதல்.

பாத்தையரோதாய்கிளவி
பாதகத்திசண்டாளி-யென்னை

துரத்திவிரட்டிவிடச்
சொல்லமனம்வந்ததடி (நன்ன)

அலங்காரம்.

அடியே நான்

ஆடுகொடுத்தேன் மாடுகொடுத்தேன்
அடுக்குமெத்தையின் வீடுகொடுத்தேன்
சேர்ந்துபடுக்கக் கட்டிலுங்கொடுத்தேன்
தினத்துக்கம்பது பணமுங்கொடுத்தேன்

அடியே

பட்டுக்கொடுத்தேன் பணிதிகொடுத்தேன்
பவளக்கொத்துகள் நகையுங்கொடுத்தேன்
பசித்திருக்காமல் பொசித்திருக்கவே
பனையநஞ்சையை எளிதிக்கொடுத்தேன்

அடியேநீ

யெல்லாம் பரித்தாய்
யென்னையுங் கெடுத்தாய்
பொல்லாப் பெடுத்தாய்
புலம்பத் தொடுத்தாய் (நன்ன)

{ தாய்க்கிளவி மாகதம்பிள்ளையோடும்
வாய்சண்டைசெய்தது. }

யென்னடாநீகொடுத்தாய்
யேதுங்கெட்டவெள்ளாம்பயலே

பொன்னானயென்மகளைப்
புண்ணிலனுந்தவிட்டாய் (நன்னு)

அலங்காரம்.

அடடா

வில்லாபுரத்து வெள்ளாம்பயலே
வீணிலெங்களைக் கெடுத்தபயலே
சூதுவாது படித்தபயலே
சூலேமேகத்தை கொடுத்தபயலே

அடடா

தாரந்தாரமென் றேய்த்தபயலே
தங்கமகளைக் கெடுத்தபயலே
சண்டிப்பயலே சவங்கப்பயலே
சத்தமேதடா பொசுங்கப்பயலே

மகளே

தடியை யெட்டி
தவடை யுடைடி
மடியைப் பிடிடி
மண்டுக் கினுடி (நன்னு)

{மாகதம்பிள்ளை தாய்க்கிளவியோடும்
கைகலந்து சண்டைசெய்தது.}

மண்டுக்கினுக்கச்சொன்ன
வாட்டுடனு அத்தையனை

கொண்டைமயிர்பிடித்து
குத்தினானேகூன்னிமூா (நன்னா)

அலங்காரம்

அடடா

கூகூவென்றாள் கொல்லுரானென்றாள்
குடிம்பிபிணைத்துக் குருகப்பிடித்தாள்
மரகதம்பிள்ளை மாணாக்கடித்தான்
வாட்டுக்கிளவி யலறத்தொடுத்தாள்

இதைக்கண்டு

மகளும்விளக்கு மாத்தையெடுத்தாள்
மன்னவன்தலையில் மாரியடித்தாள்
அடிபொருக்காமல் கீழேவிழுந்தான்
அருத்தஆடுபோல் காலையுதைந்தான்

அடடா

ஐயோ ஐயோ
ஆருமி லையோ
குய்யோ குய்யோ
கொடுமையிலையோ (நன்னா)

{ தாய்க்கிளவிமகளைக்கையில்பிடித்துக்கொண்டு
புதுமண்டபத்தில்வந்து முறையிடுதல். }

மாத்தாலடிகள்பட்டு
மயங்கிக்கிடைக்கையிலே

மகளையுங்கைப்பிடித்து
வந்தாள்புதுமண்டபம்

அலங்காரம்

ஐயையோ

ராமலிங்கரே நாசமையரே
நாய்க்கமார்களே களினக்காரரே
ஞாயமில்லையோ நடுவுமில்லையோ
நாட்டிலென்னுட கேள்வியில்லையோ

யெவனோ

வில்லாபுரம்மா வெள்ளாம்பயலா
வீட்டிலிருந்து லூட்டிசெய்கிறான்
அளகுமகளைக் கெடுத்துப்போட்டான்
அடித்தென்னையுந் தாத்திப்போட்டான்

அவனுட

அடியைப் பாருங்கள்
அளைத்துக் கேளுங்கள்
கொடுமை தீருங்கள்
கூப்பிட்டுக் கேளுங்கள் (நன்னா

பொது விருத்தம்.

வர்ணித்துக்களைபாடிய மண்டபமிருந்தோரெல்லா
ஒர்மித்துகூடியிந்த உன்னிதமறிவோமென்று

அரிவித்து ஒருவனைப் போய் அழைத்துவா வென்றபோது
மரிக்கத்தள்ளாடி வீழ்ந்து மாரகதம்பிள்ளை வந்தான்.

(இதுவுமது.)

வந்ததோர் பிள்ளை தன்னை மண்டபத்துள் ளிருத்தி
யெந்தவூ ரெந்தத்தேசம் யிருப்பிட மெவடமிங்கே
வந்தவாருரையு மென்றார் மாரகதம்பிள்ளை பட்ட [னே.
தொந்திரவெல்லாஞ் சொல்லி தொழுது மே புலம்புவா

(மாரகதம்பிள்ளை சொல்லுதல்.)

தெம்மாங்கு

மதுரைக்கு நேரே தெற்கே
 வாழ்ந்திருந்தேன் வில்லாபுரம்
திருப்பரங்குன்றத்திலே
 திருவிழாவைப்பார்க்கப்போனேன். (நன்று)

அலங்காரம்.

ஐயயோ

| | |
|---|---|
| கார்த்திகைக்கிரான் | போனேனையா |
| கன்னியையங்கே | கண்டேனையா |
| பசப்பியென்னைப் | பகட்டினாளையா |
| பாவிமையலில் | சிக்கினேனையா |

ஐயயோ

| | |
|---|---|
| யேனமதியை | யிழந்தேனையா |
| யிருந்தபொருளைக் | கொடுத்தேனையா |

உண்ணமரக்கலே    யென்றிவள்சொல்லி
ஓங்கிவலக்கை    யடித்தாளேயா

அதைநான்

உண்மையென்    றிருந்தேன்
உள்ளதை    யிளந்தேன்
நன்மையென்    றிருந்தேன்
நாசம்    மடைந்தேன்    (நன்று)

இதுவுமவன்சொல்லுதல்.

மண்டியிருந்து
வளக்குரைக்கும்மன்னவரோ-யிந்தக்
கண்டாரஒளியாலே
காசுபணந்தோத்தேனையா    (நன்று)

அலங்காரம்,

அடடா

ஆடுகொடுத்தேன்    மாடுகொடுத்தேன்
அடுக்குமெத்தையின்    வீடுகொடுத்தேன்
சேர்ந்துபடிக்கக்    கட்டிலுங்கொடுத்தேன்
தினத்துக்கம்பது    பணமுங்கொடுத்தேன்

ஐயய்யோ

பட்டுக்கொடுத்தேன்    பணிதிகொடுத்தேன்
பவளக்கொத்துகள்    நகையுங்கொடுத்தேன்

பசித்திருக்காமல் பொசித்திருக்கலே
பளையநஞ்சையை யெளிதிக்கொடுத்தேன்

ஐயையோ

யெல்லாம் பரித்தாள்
யென்னையுங் கொடுத்தாள்
பொல்லாப் பெடுத்தாள்
புலம்பத் தொடுத்தாள் (நன்னு)

(இதுவு மவன்சொல்லுதல்,)

யெல்லாம்பரித்துவிட்டு
யேதுங்கெட்டதட்டுவாணி
பொல்லாதவெள்ளைமேகம்
[illegible]க்கொடுத்தாளையா

அலங்காரம்,

ஐயையோ

அண்டவாதம் அரிகிரந்தி
அரைவாப்பு அளுகச்சிலந்தி
கண்டமாலை கன்னத்துப்புத்து
கத்திக்குலைத்திடுங் குத்தியவிருமல்

ஐயையோ

வெட்டையுஞ்சூலை வெள்ளைக்கடுப்பு
மேகவாய்வு சோகைபாண்டு

# மனோரஞ்சித அலங்காரம்.

வீட்டியாக்காசசல் பட்டிடாமாச்சல்
விதிப்புருதுங் 'காக்கைவலிப்பு

ஐயையோ

வினையைக் கொடுத்தாள்
விரட்டி அடித்தாள்
அணைய அடுத்தாள்
அடிக்கத் தொடுத்தாள் (நன்று)

(...களைவிபார்த்துச் சிணுங்குசொல்லுதல்)

கொடுத்தவன்போலேயிவள்
கொண்டாட்டமாடுகிறான்
...த்தாடிவிளக்குமாத்தை
பின்னரெண்டு அடியடிப்போம ... (நன்று)

அலங்காரம்

அடடா

...லாபுரத்து வெள்ளாம்பயலே
...லிங்கனைக் கெடுத்தபயலே
...ரந்தாம...மன் தேய்த்தபயலே
...மகனைக் கெடுத்தபயலே

அடடா

...துவாது படித்தபயலே
...மேகத்தை கொடுத்தபயலே

சண்டிப்பயலே சவங்கப்பயலே
சுத்தமேதடா பொசுங்கப்பயலே

மகளேநீ

தடியை பெட்டி
தவடை யுடடி
மடியைப் பிடிடி
மானங் குலேடி (நன்னு)

(மாகதம்பிள்ளை சொல்லுதல்)

மானங்குலேக்கச்சொல்லி
மகளைவிட்டினுக்கச்சொன்னாய்
நானங்கெட்ட கண்டாரோளி
நானுஞ்சும்மாவிடுவேனடி, (நன்னு)

அலங்காரம்

அடியே

வித்தைசிரிக்கி வேசைச்சிரிக்கி
யினிக்கியென்னைக் கெடுத்தசிரிக்கி
வீட்டுச்சொத்தெல்லாம் பரித்தசிரிக்கி
வெட்டைக்கிரந்தியை கொடுத்தசிரிக்கி

அடியே

மண்டுக்கடையிலே மஞ்சளைப்பூசி
மகனுந்தானுந் திரிந்தசிரிக்கி

தெருக்கடையிலே மஞ்சலைப்பூசித்
திண்ணைகள்தோறும் படுத்தசிரிக்கி

அடியே

வாலிபர்குடியைக் கெடுத்தசிரிக்கி
வாங்கிவெங்கணை விடுத்தசிரிக்கி
சத்தியமென்றால் மகளைப்பிடித்துத்
தலையில்மாரி யடித்தசிருக்கி

அடியே

சொக்கர்கோயிலில் மகளைப்போட்டு
சொல்லியளுது தாண்டுஞ்சிரிக்கி
சண்டிச்சிரிக்கி சவங்கச்சிரிக்கி
சத்தமேதடி பொசுங்கச்சிரிக்கி

அடியே

சப்பாத் தெடுப்பென்
தவண்டை யுடைப்பேன்
அப்பாம் பேசினால்
ஆக்கினை கொடுப்பேன் (நன்ன)

(தாய்க்கிளவி சொல்லுதல்.

யெல்லாம்அரிந்திடுங்கள்
யேதுங்கெட்டவெள்ளாம்பயல்

சொல்லாதுசொல்லியென்னை
சோட்டாலடிப்பேனென்றான், (நன்று)

அலங்காரம்,

அடடா

கொங்காப்பயலே கோலாப்பமலே யென்
குடியைக்கெடுத்த குருட்டுப்பயலே
வேங்கம்பயலே வெகிளிப்பயலே
மிச்சமேதடா கொச்சைப்பயலே

உனக்கின்னம்

மானமில்லையோ மதியும்மில்லையோ
வயருவளர்க்கப் புகலுமில்லையோ
வாசம்பொருந்துந் தாசிதூமையை
வாங்கிகுடிக்க யீனமில்லையோ

மூகத்தை

வாண்டிப் போடட்டா
வாயைக் கீரட்டா
சாண்டிப் போடட்டா
துடுப்பால் மாரட்டா (நன்று)

(மாகதம்பிள்ளை சொல்லுதல்,)

அள்ளிக்கொடுத்தபணம்
அத்தினையுநானினைந்தால்

வயருபெரியுதடி
மானங்கெட்ட தட்டுவாணி.

## அலங்காரம்.

அடியே

| | |
|---|---|
| தட்டளிந்தா | தரங்குலைந்தா |
| தாசிமாரிடஞ் | சீரளிந்தா |
| மூக்களிந்தா | முனை முரிந்தா |
| மூணு தட்டுக்குச் | சேலையுரிந்தா |

அடியே

| | |
|---|---|
| நஞ்சாபிஞ்சா | நார்பரிஞ்சா |
| பேரளிஞ்சா | பிலங்குணாஞ்சா |
| ஊரரிஞ்சா | உரமரிஞ்சா |
| நாடளிஞ்சா | நடுவளிஞ்சா |

அடியோங்களுக்கு

| | |
|---|---|
| சாலையெத்தினி | சத்திரமெத்தினி |
| சந்தையில்வார | பயல்களெத்தினி |
| ரோட்டுப்பாதை | கோட்டைகிணறு |
| பிடிந்தவீடு | படிந்தகாடு |

அடியே

| | |
|---|---|
| வைகையாத்திலே | மணலுஞ்சேத்திலே |
| கள்ளிக்கடியிலே | முள்ளிச்செடியிலே |
| மண்டுக்கடையிலே | தொண்டுக்கடவிலே |
| குட்டிச்சுவத்திலே | கூளாப்பாத்திலே |

அடியே

# மனோஞ்சித அலங்காரம்

காலெடுத்தா கலந்தடித்தா
துடையெடுத்தா திட்டெப்பரித்தா
வலியவந்தா மானங்குலைந்தா
சேரவந்தா மானங்குலைக்கா

அடியே

நாத்தமெடுத்தா நசையெடுத்தா
நடுத்துறையிலே கிளியெடுத்தா
வெள்ளையெடுத்தா வெட்டைகுடித்தா
மினுக்குக்குலுக்கிச் குலுங்கெடுத்தா

அடியெனக்கு

வெக்க மில்லையோ
விசன வல்லையோ
சுக்கும் மில்லையோ
சலிப்பு வல்லையோ

(தாய்கிளவி சொல்லுதல்;

காசுகொடுத்தவன்போல்
கைநிரம்பத்தந்தவன்போல்
பாசாங்குசெய்கிறாண்டி
பார்த்தோர்நிசமென்றெண்ண (நன்று)

அலங்காரம்.

என்னடா

அரசம்பட்டையே அருகமுட்டையே
நவ்வாப்பட்டையே நாயுடவிட்டையே

தூத்தகட்டையே சோம்பரிமட்டையே
துப்பியேசிந்த பொயிலேக்கட்டையே

அடேநீ

கஞ்சிக்கலேந்தாய் சோத்துக்கலேந்தாய்
கடைத்தெருவெல்லாம் மானங்குலேந்தாய்
காளேநயினர் கவியைப்பாடியென்
கண்ணுனமகளேக் கற்பையளித்தாய்

உனக்கு

காசு மெத்தவோ
கருமஞ் சுத்தவோ
தோசம் பத்தவோ
சூலே முத்தவோ (நண்ணு)

{ சபையோர்கள் தர்க்கம்பேசுகிற யிருவரையும் வாய்யமர்த்திச் சொல்லுகிற பொது விருத்தம். }

யிருவருந்தர்க்கமாடி யிருப்பதைச்சபையோர்பார்த்துச் செருவங்கொண்டதட்டிப் பேசுங்கிளவியைவாய்யமர்த் உருவங்கள்ளிந்துவுள்ள உடம்பெல்லாம்புண்ணுநிற்கும், மாகதம்பிள்ளேதன்னே மன்னவரேச்சுகின்ருர்

தெம்மாங்கு.

பிள்ளைமகனே
பெருத்தசமுசாரி
யெள்ளளவுந்தாசிகையில்
யிட்டபொருள்வாராதையா
அலங்காரம்.
அடடா

சமுத்திரத்திலே கவுள்ந்தபானு
தாசிகையிலே கொடுத்தபொருளு
வயதிலிருந்த வாலிபத்தனமு
மாண்டுபோன கிளட்டுப்பிணமும்

அடடா

பாம்புவாயிலே பண்டிடுந்தேரையும்
பாத்தையர்களுக் கிட்டிடும்மிரையும்
ஆணைவாயிலே போனகரும்பும்
அக்கினிவாதையில் சிக்கினதுரும்பும்

அடடா

அப்புரம் வருமோ
அளுதாத் திருமோ
திர்ப்தி யாகுமோ
திரும்பி வருமோ (நன்னு)

# மனோஞ்சித அலங்காரம்.

(இதுவும்சபையோர்கள்சொல்லுதல்)

காசுபணம்போச்சுதென்று
கவலைவைக்கவேண்டாமையா
வேசையுட ஆசைவிட்டால்
வேணபொருள்தேடலாமே. (நன்று

அலங்காரம்.

அடடா

மனோஞ்சிதத்தை மறந்துபோடு
வைத்தஆசையை யிளந்துபோடு
பொஸ்தாமணையில் தீர்த்தமாடு
புண்ணியவான்க விருப்பைத்தேடு

அடேயினி

வீட்டைப்பார்க்க நடந்துகூடு
வியாதிதீர்க்க மருந்தைத்தேடு
வேசையாசையும் பாசமும்நீங்க
மெஞ்ஞானத்துட வளியைத்தேடு

அதிலே

விபரந் தோணும்
வினைகள் நாணும்
பவரங் காணும்
பாக்கியம் பூணும் (நன்று)

பஞ்சாயத்தார் வளக்குத்
தீர்த்துவிட்டுப் போயியது
விருத்தம்.

பாலனுக்கிவர்களெல்லாம் பண்புறப்போதித்தப்பால்
காலன்போல்நிற்குமின்றகன்னியின் தாயைக்கூவி
யேலஞ்சேர்குளலேபொந்த னிருப்பிடமேகுமென்று
சாலவேயுரைத்துவிட்டுத் தம்பதிசேர்ந்திட்டாரே

மாகதம்பிள்ளை புதுமண்டபத்தைவிட்டுப்போய்
மீனாட்சிபொற்றாமரையில்ஸ்தானஞ்செய்தது
பொது விருத்தம்.

சேர்ந்திடமரகதந்தான் சிந்தையுள்கலங்கியேங்கி
சோர்ந்துமண்டபத்தைநீங்கி சுந்தரமீனாள்பக்கம்
சார்ந்துயிம்மூனைகளிட்டு சமுகம்பொற்றாமரையில்
ஆள்ந்துமெமுனுகவேசை யாசையைமறந்திட்டானே

(இதுவுமது)

பாத்தையர்மயக்கம்நீங்கி பாதையைக்கூடிமெள்ள
வருத்தமாய்நடந்துள்காந்து மருகித்தள்ளாடிவீள்து
சிரத்தொடுமேனியெல்லாம் சீயினால்யீய்கள்மொய்க்க
தாத்தொடுவருகக்கண்டு சொல்லுவாரூரிலுள்ளோர்.

{ ஊரூர் மாகதம்பிள்ளையைப்பார்த்து ஏசுதல் }
தெம்மாங்கு

மாகதம்பிள்ளையரே
வலுத்தசமுசாரியரே
குளைநோவுங்கிராந்திபத்திக்
குரங்குபோலுமானீர்களோ. (நன்று

## அலங்காரம்

அடடா

சாந்துகளெங்கே சவ்வாதெங்கே
சரிகைவேஸ்டித் தமாசெங்கே
மல்லிகைசூடுங் குடும்பியெங்கே
மார்பில்சந்தனப் பூச்சுமெங்கே

அடடா

பவுசும் போச்சோ
பளம்புண் ணாச்சோ
சொகுசும் போச்சோ
சொல்வாற் கேச்சோ (நன்று)

(இதுவும் ஊரார்பேசுதல்,)

வெட்டைகிரந்திவெள்ளை
வெடிசூலையரையாப்பு
ஓடோடும்பணங்கொடுத்து
உள்ளதெல்லாவாங்கினீரே (நன்று)

அலங்காரம்

அடடா

சாந்துகளெங்கேசவ்வாதெங்கே (நன்று)

இதுவுமது,

தாசிமனோரஞ்சிதத்தை
தஞ்சமென்றுபோனீர்களே
காசைப்பறித்துவிட்டுக்
கடைத்தெருவிலோட்டினளே. (நன்று)

{ ஷை அலங்காரம்சொல்லவும்
பொதுவிருத்தம், }

யிப்படியூரிலுள்ளோரேசியேநகைக்கப்பிரமன்
கர்ப்பிணைப்படியோயென்றுகதரியேபுலம்பிப்பாலன்
சொர்ப்படிதவிரிடாததுரைகள்கும்பினியார்வைத்த
அர்ப்புதநீதியோங்குஆசுப்பத்திரியில்சென்றான்,

(இதுவுமது,)

சென்றுமுன்னாலேபட்டதீவினையதனையெல்லாம்
நின்றுமேபுலம்பிச்சொன்னான் நிருபர்களதனைக்கேட்டு

தின்றிடச்சினமதாணார்டிரசர்டாக்கட்டரெல்லாம்
நன்றுநன்றமர்த்திவைத்தியம்நாடியேகூடிசெய்தார்,

{ சிவில்ஆஸ்பத்திரியில்மரகதம்பிள்ளைக்கிச்
சத்தரம்வைத்தது,
தெம்மாங்கு }

மரகதம்பிள்ளையினை
மல்லாக்கத்தான்கிடத்தி
சத்தரங்கள்வைக்கையிலே
கத்திப்புலம்புறானே. (நன்று)

அலங்காரம்.

அட்டா

அப்பா அய்யா அருக்காதையா
அடியேன் வேதினை பொருக்கேனையா
சத்திரம்வைத்தது போதுமையா
சாமியென்னைநீ விட்டிடுங்கையா

ஐயய்யோ நான்.

செத்தாலுதான் சாகிறேனையா
சீவனிருந்தால் போகிறேனையா
காணைப்பிதிக்கி யெடுக்காதையா ஒன்
காலுக்கும்பிடு போடுறேனையா

யென்னுட

கையை — விடுங்கள்
கத்தியை யெடுங்கள்

பையத் தொடுங்கள்
பாவியை விடுங்கள் (நன்று

### பொது-விருத்தம்

அலரிடச[illegible]த்தாம்வைத்து அருத்துமேகிளித்துஉள்ளில்
களரியேசிய்கலெல்லாங்கழுவியேசுத்தமாக்கி
பலமதாய்மருந்துகட்டிப்பிணியொடுபுண்களாத்தி
நலமதாய்முன்னிருந்த நளினம்போல்செய்திட்டாரோ

{ சிவிலாஸ்ப்பத்திரியார்மாகதம்பிள்ளைக்கி
சீக்கைதீர்த்துவெகுமதிகொடுத்தனுப்பியது }

### அகவல்

செகமெல்லாம்போற்றச்செங்கோல்செலுத்தும்
மகிமையாம்ராணிமகாராஜாத்தியாள்
நீதியாய்தருமம் நிலைநிறுத்திடவே
சோதிசேர்மதுரைதொன்னகரதனில்
வைத்தாஸ்பத்திரியில்வாசஞ்செய்கின்ற
ஜெகத்தினில்பொகள்பெரும்டிரசர்டாக்டர்
மாகதம்பிள்ளையார்மாய்கையால்கொண்ட
குறைகள்நோவதனைகோதறத்தீர்த்து
அன்னமுஆடையுமவன்றனக்கீய்ந்து
சொர்ணமுங்கொடுத்துத்துயரெல்லாந்தீர்த்து
அன்புடன்மகிளஅனுப்பிவைத்தார்கள்

யின்பமாய்மாகதம்மேவியேமுன்னால்
வீடுவைத்திருந்தயில்லாந்திருப்பி
மாடுடன்னாடும்மனைவியும்சேர்த்து
தாள்ந்திடாக்குடியாய்தனம்பெருஞ்செல்வ
வாள்ந்துமேயிருந்தான்வையகமதனில்
ஆகையினாலிந்தகிலமீதுள்ளோர்
மாய்கையாய்வேசைமையலில்வீழ்ந்து
மாகதம்பிள்ளைபோல்மயங்கிவாடாமல்
குணாவிலாச்செல்வமுங்குலத்தொடுவாள்
இன்பமாய்நயினானெனப்பெயர்விளங்கிய
கம்பமாநகர்வாள்காளைறாவுத்தன்
பாடினேனிந்தப்பனுவலைப்புருடர்கள்
நாடியேபார்த்துநல்வளிநடப்பீர்
யிந்நகர்கதையையியல்புரப்படித்தோர்
சிந்தைகள்மகிழ்ந்துசிரப்பொடுவாள்க
உத்தமர்வாளியுலகெல்லாவாளி
சித்தர்கள்வாளிஜீகம்வாளிவாளியே,

காளைநயினார்புலவர்பாடிய

மனோரஞ்சித அலங்கார

முற்றிற்று